# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
# நடவடிக்கைகளின் சுருக்க வெளியீடு எண் 7
# 2026, பிப்ரவரி 19, வியாழக்கிழமை
# மாசி 7, திருவள்ளுவர் ஆண்டு – 2057

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9.30 மணிக்கு, **மாண்புமிகு பேரவைத் தலைவர்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

பேரவை நிகழ்ச்சிகள் கீழ்க்காணும் குறளுடன் தொடங்கி வைக்கப்பெற்றன:–

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டும் உலகு."

(நீதி வழுவாமல் நன்மைகளைச் செய்து பிறருக்குப் பயன்படப் பணியாற்றுகிறவர்களின் நல்ல பண்பை உலகம் பாராட்டும்.)

1. வினாக்கள் – விடைகள்

வரிசை எண்கள் 31 முதல் 41 வரையுள்ள உடுக்குறியிட்ட வினாக்கள் பேரவையில் வினவப்பட்டு விடையளிக்கப்பட்டன.

2. குழுக்களின் அறிக்கைகள் அளித்தல்

(1) மதிப்பீட்டுக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

**திரு. எஸ். காந்திராஜன், மதிப்பீட்டுக் குழுத் தலைவர்** அவர்கள் 2024–2026–ஆம் ஆண்டுகளுக்கான மேற்படி குழுவின் ஐம்பத்து நான்காவது முதல் அறுபத்து இரண்டாவது வரையிலான (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

(2) பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

**திரு. A.P. நந்தகுமார், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்** அவர்கள் 2024–2026–ஆம் ஆண்டுகளுக்கான மேற்படி குழுவின் நூற்று எழுபத்து ஆறாவது மற்றும் நூற்று எழுபத்து ஏழாவது (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

(3) அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல்

**திரு. தி. வேல்முருகன், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்** அவர்கள் 2024–2026–ஆம் ஆண்டுகளுக்கான மேற்படி குழுவின் நூற்று முப்பத்து எட்டாவது மற்றும் நூற்று முப்பத்து ஒன்பதாவது (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளைப் பேரவைக்கு அளித்தார்.

(4) பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுவின் அறிக்கை அளித்தல்

**டாக்டர் இரா. இலட்சுமணன், பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள் குழுத் தலைவர்** அவர்கள் 2024–2026–ஆம் ஆண்டுகளுக்கான மேற்படி குழுவின் பன்னிரெண்டாவது (பதினாறாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கையை பேரவைக்கு அளித்தார்.

..2

3. <u>2026–2027–ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் 2026–2027–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கை</u>

2026–2027–ஆம் ஆண்டிற்கான இடைக்கால நிதிநிலை அறிக்கை மற்றும் 2026–2027–ஆம் ஆண்டிற்கான வேளாண்மை இடைக்கால நிதிநிலை அறிக்கை ஆகியவற்றின் மீது பொது விவாதம். **(இரண்டாம் நாள்)**

**கீழ்க்காணும் உறுப்பினர்கள் விவாதத்தில் கலந்து கொண்டனர்:–**

9. **திரு. மா. சின்னதுரை**
10. **திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்**
11. **திரு. ம. சிந்தனை செல்வன்**
12. **திரு. தி. வேல்முருகன்**
13. **திரு. நயினார் நாகேந்திரன்**
14. **திரு. ஜி.கே. மணி**
15. **முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா**
16. **டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்**
17. **திரு. செ. ராஜேஷ் குமார்**
18. **திரு. எடப்பாடி K. பழனிசாமி,**
    **எதிர்க்கட்சித் தலைவர்**

4. <u>அரசினர் தீர்மானம்</u>

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் தீர்மானத்தை முன்மொழிந்தார்:–

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள் – விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ தளர்த்தி, நாளை வெள்ளிக்கிழமை (20.02.2026) அன்று அந்நேரத்தை அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப் பெற வேண்டும்."

மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஏற்கப்பட்டது.

பேரவை பிற்பகல் 4.52 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பேரவை மீண்டும் 2026–ஆம் ஆண்டு பிப்ரவரி **திங்கள் 20–ஆம்** நாள் **வெள்ளிக்கிழமை** காலை 9.30 மணிக்குக் கூடும்.

**முனைவர் கி. சீனிவாசன்,**
**முதன்மைச் செயலாளர்.**